தமிழ்ச் சிட்டு

சிந்தனை செய்து பேசுக!

கண்டதை யெல்லாம் பேசலாகாது
காணா(து) எதனையும் பேசுதல் தீது
கண்டதைச் சிந்தனை செய்திட வேண்டும்
கனிவொடு பிறரிடம் பேசுக யாண்டும்!

நினைத்ததை யெல்லாம் பேசலாகாது
நினையா(து) எதனையும் பேசுதல் தீது
நினைத்ததைச் சிந்தனை செய்திட வேண்டும்
நேர்த்தியாய்ப் பிறரிடம் பேசுக யாண்டும்!

கேட்டதை யெல்லாம் பேசலாகாது
கேளாத வற்றைப் பேசுதல் தீது
கேட்டதைச் சிந்தனை செய்திட வேண்டும்
கேட்பவர் உளங்கொளப் பேசுக யாண்டும்!

தெரிந்ததை யெய்லாம் பேசலாகாது
தெரியா எவற்றையும் பேசுதல் தீது
தெரிந்ததைச் சிந்தனை செய்திட வேண்டும்
தேவை யறிந்தே பேசுக யாண்டும்!

மனம் போன போக்கில் பேசலாகாது
மனமின்றி எதனையும் பேசுதல் தீது!
மனமதிற் பட்டதைச் சிந்திக்க வேண்டும்
மதிப்பொடு பிறரிடம் பேசுக யாண்டும்!

—இறை:

குரல் : 22
இசை : 4

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை :
உருபா : 1 50

வாழ்வின் படிப்பினைகள்.

(காசி ஆனந்தனின் கதைகளிலிருந்து.)

நிறைவு:

நகைக்கடைக் கண்ணுடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த அரத்தினக் கல்லைப் பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் அழுக்காறடைந்தது.

'எனக்கு ஏன் மதிப்பில்லை? நானும் ஒரு கல்தானே...'—என்று ஓலமிட்டது.

தெருவோரத்தில் கிடந்த கடப்பாரை கூறியது:—

'ஏ குறுணி! காலம் முழுதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக் கொண்டு பலரும் பார்க்கத் தெருவில் கிடக்கிருய். ஆனுல், அரத்தினக் கல் அப்படியா? நிறைந்து வளர்ந்து அரத்தினமாகும் வரை வெளியில் தலை காட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத் தானே உருவாக்கிக் கொண்டிருந்தது'.

'அப்படியென்ருல்...?' என்று இழுத்தது குறுணிக்கல்.

கடப்பாரை சொன்னது:—

'நிறைவாகும் வரை, மறைவாக இரு.'

தோல்கள்:

பாம்பு தோலைக் கழற்றி வைத்துவிட்டுப் புறப்பட்டது. ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்த பக்கம் அது போனது.

அங்கே நின்ற தனியன் ஆட்டிடம், 'அதோ பார்...பாம்பு உன்னுடையவர்கள் இருக்கும் இடத்தை நோக்கித்தான் போகிறது. நச்சுப் பாமபு— பல்பட்டாலே போதும்...என்று கூறியது சேவல்,

'அப்படி ஒன்றும் நடந்து விடாது...பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாய்ப் பிறந்திருக்கிறது...'—என்றது தனியன் ஆடு.

சிறிது நேரத்தில் ஆடுகளின் அலறல் புல் வெளியை உலுக்கியது. ஓசை வந்த திசை நோக்கி தனியன் ஆடும் சேவலும் ஓடின, அங்கே—

ஐயோ...அந்த ஆடுகள் இரண்டு பாம்புக்குப் பலியாகிச் செத்துக் கிடந்தன.

சேவல் சொல்லியது:-

"பல்லைக் கழற்ருத பாம்பு
தோலைக் கழற்றி என்ன? வாலைக் கழற்றி என்ன?"

உரிமை:

மழை.
தவளைகள் மகிழ்ச்சியோடு உரக்கக் குரலெழுப்பின.
குளத்தில் இருந்த ஆமை தவளைகளைப் பார்த்துச் சொன்னது:-
'இப்படிக் கத்துகிறீர்களே—உங்கள் குரலைக் கேட்டுப் பாம்பு உங்களைப் பிடித்துவிட்டால் உங்கள் நிலை என்ன ஆவது?'
தவளைகள் சிரித்தன,

'நாங்கள் கொஞ்சமும் கவலைப்பட மாட்டோம்,—என்றது கூட்டத்தில் ஒரு தவளை
இன்னொரு தவளை சொன்னது:
'மூச்சை இழக்கலாம்—பேச்சை இழக்கலாமா?' O

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்கு நல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 22] (தி.பி. 2024) மேழம் (ஏப்ரல்-மே: 93) [இசை 4

திருக்குறட் பயிற்சியும் சிந்தனையும்.

மாணவர்கள் கோடை விடுமுறையைப் பயனுள்ள முறையில் கழிக்க முற்பட வேண்டும். கூத்தும் கும்மாளமும் ஓயாத விளையாட்டுகளுமாகத் தொடரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், வானொலிக் கூச்சல்களும், மக்களைக் கட்டாயமாக ஈர்க்கின்றன. உண்ணவும் உறங்கவும் பிறரோடு உரையாடவும் இயலாத அளவிற்கு மக்கள் அவற்றால் பிணிக்கப்படுகின்றனர்.

தொலைக்காட்சிப் பெட்டியில், நிலையத்தாரின் ஒளிபரப்பு மட்டுமா? பல்வேறு ஒளிபரப்புகளும், படப்பதிவு நாடாக்களும பிறவுமாக அதன் பயன்பாடுகள் விரிவடைந்து கொண்டே செல்கின்றன. அவை அனைத்துத் தரப்பு மக்களையும் முழு நேரமும் ஆட்கொள்கின்றன.

ஆற்றல் வாய்ந்த அருங்கருவிகளான தொலைக்காட்சி முதலானவை நம் நாட்டைப் பொறுத்த வரையில் அறிவை மழுங்க அடிப்பனவாகவும் காலத்தைக் கொல்லுவனவாகவுமே இயங்குகின்றன.

மாணவர்கள் இத்தகைய களியாட்டங்களிலும் காலக் கழிவிலுமே முற்றிலுமாக மூழ்கி விடாமல் பயனுள்ள அறிவு நூல்களைப் பயில்வதில் ஆர்வம் கொள்ளுதல் வேண்டும்.

உலகப் பொதுமறையும் நம் அருமைத் தமிழ் மறையுமான திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல். எல்லா நிலையினருக்கும் பயன்படுவது அது. மாணவர்கள் திருக்குறட் பயிற்சியில் ஈடுபடுதல் வேண்டும். இயன்றவரை பாக்களை மனனம் செய்து கொள்வது மிகவும் நல்லது. மக்களுக்குரிய இலக்கணமாகத் திருவள்ளுவா என்ன கூறுகிறார் என்பது பற்றிக் காண்போம் வாருங்கள்.

உயிரிகள் எண்ணற்றவை. அவை தாம் வாழும் சூழ்நிலைகளுக்கு ஏற்பப் பலவகையான உடலமைப்புகளையும், இயக்க முறைகளையும், இயல்புகளையும், பழக்க வழக்கங்களையும், அறிவு நிலைகளையும உடையனவாக விளங்குகின்றன. அவற்றிற்கிடையே காணப்படும் பொதுத் தன்மைகளைப் பொறுத்து அவை பற்பல வகையினவாகப் பாகுபடுத்தப்படுகின்றன.

புல் பூண்டுகளைப் போல் இடம் பெயராமல் நிலைத்திருப்பனவும், புழு பூச்சிகளும் பிறவும் போல் இடம் பெயர்ந்து செல்வனவுமாக உயிரிகள் இரு வகைப்படுகின்றன. இவற்றை முறையே நிலைத்திணை என்றும், இயங்குதிணை என்றும் கூறுகிறோம்.

உணவுப் பழக்கத்தைப் பொறுத்து இயங்குதிணை உயிரிகள் புல்லுண்ணிகள் என்றும் புலால் உண்ணிகள் எனறும் இருவகைப் படுகின்றன.

இவ் இயங்குதிணை உயிரிகளை அவற்றின் இயக்கத்தைப் பொறுத்து நீந்துவன, ஊர்வன, பறப்பன, நடப்பன எனப் பிரிப்பது மற்றொருவகைப் பாகுபாடு.

இவற்றுள் நீந்துவனவெல்லாம் அவை வாழும் இடத்தைப் பொறுத்து நீர்வாழ்வனவாகும். ஏனையவை நிலம் வாழ்வனவாகும். இனி, நிலைத்திணை, நீந்துவன, ஊர்வன, பறப்பன, விலங்கு, மக்கள் எனப் பகுப்பதோடு தேவர் எனப்படுவோரையும் கூட்டிப் பிறப்பை எழுவகையாகக் கூறுவோரும் உள்ளனர்.

மக்களை உயர்திணை என்றும், மற்றவற்றையெல்லாம் அஃறிணை என்றும் கூறுவது வேறொருவகைப் பாகுபாடு. பிற்கால இலக்கண நூல்கள் மக்களோடு, தேவர், நரகர் எனப்படுவோரையும் உயர்திணையில் சேர்த்துக் கொண்டன.

இவையெல்லாம் அல்லாமல் உயிரிகளை அவற்றின் அறிவு நிலைக்கு ஏற்ப ஓர் அறிவு உடையன முதல் ஆறு அறிவு உடையன ஈறாக ஆறு வகையினவாகப் பகுப்பது இன்னொரு வகைப் பாகுபாடு.

தொடு உணர்ச்சியாகிய உற்றறிவு மட்டும் உடையன ஓரறிவு உயிரிகள் என்றும், உற்றறிவோடு நாச்சுவையும் உடையவை ஈரறிவு உயிரிகள் என்றும், இவ் ஈரறிவோடு மோப்ப அறிவும் உடையவை மூவறிவுயிரிகள் என்றும், இம்மூன்றனோடும் காட்சியறி

வும் பெற்றவை நாலறிவு உயிரிகள் என்றும், இந் நான்கினோடு கேள்வியறிவும் உடையவை ஐயறிவு உயிரிகள் என்றும், மேற் கூறிய ஐயறிவோடும் எண்ணுகின்ற மன அறிவும் பெற்றவை ஆறறிவு உயிரிகள் என்றும் கொள்ளப்படுகின்றன.

பழந்தமிழ் இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் இவற்றை வகுத்துரைக்கும்போது "நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே" என்று குறிப்பிடுவதால் தொல்காப்பியருக்கு முந்திய அறிஞர் பெருமக்களே உயிரிகளை அவற்றின் அறிவு நிலை அடிப்படையில் பாகுபடுத்தியுள்ளமை அறியப்படுகிறது. மிக நீண்ட நெடுங் காலத் திற்கு முன்பே இத்தகைய நுண்ணறிவைத் தமிழ் மக்கள் பெற்றிருந் திருக்கின்றனர்.

புல்லும் மரமும் பிறவும் ஓரறிவின என்றும், நத்தையும் கிளிஞ்சிலும பிறவும ஈரறிவின என்றும், கறையானும் எறும்பும் பிறவும மூவறிவின என்றும், நண்டும் தும்பியும் பிறவும் நாலறிவின என்றும், விலங்கும் பறவையும் பிறவும் ஐயறிவின என்றும் எடுத்துக்காட்டுகளுடன் தொல்காப்பியர் விளக்கிக் கூறுகிறார். கூறி

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

என்று தெளிவுறுத்துகிறார்.

வேறு எந் நாட்டிலும் எந்த மக்கட் கூட்டத்திலும், இலக்கணியரோ, அறிவியலாளரோ உயிரிகளை இவ்வாறு அறிவுநிலை அடிப் படையில் பாகுபடுத்திக் கண்டிலர். மேற் கூறியபடி இயக்க முறைகள், உணவுப் பழக்கம், வாழுமிடம், உடலமைப்பு முதலிய புற அடிப்படையிலான பாகுபாடுகளே அவர்களிடையே நிலவுகின்றன. இது நிற்க!

தொல்காப்பியத்தின் அடிப்படையில் ஆறறிவு உடைய உயிரிகளெல்லாம் மக்களே. ஆயினும் திருவள்ளுவப் பெருந்தகை அதற்கு உடன்படவில்லை.

உடல் உறுப்புகளைப் பொறுத்தோ, ஏன், அறிவு நிலைகளைப் பொறுத்தோ ஒரு சார் உயிரிகளை மக்கள் எனக் கூடாது; பண்பாட்டின் அடிப்படையிலேயே மக்கள் யார் என்பதை வரையறுக்க வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. இதனை

"உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு"

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்"

என்னும் குறட்பாக்களால் அறியலாம். இது பற்றி மேலும் சிந்தியுங்கள்.

—இறை.

தாலாட்டுமிடத்தில் வாலாட்டமாட்டேன்!

-நாவேந்தன்.

ஓர் அடர்ந்தச் சோலையில் ஒரு குயில் அழகாகக் கூவிக்கொண்டிருந்தது. அதைக் கேட்ட மயில், 'ஏய்! வாயை மூடுகிறாயா இல்லையா?, என்று மிரட்டியது.

குயிலுக்கு ஒன்றும் புரியவில்லை. இது ஏன் நம்மை மிரட்ட வேண்டும்?

'தேவையில்லாமல் என்னை ஏன் மிரட்டுகிறாய்? நீ என்ன பெரிய ஆளா?'' என்றது குயில்.

'இல்லையா பின்னே! நான் இந்த நாட்டுக்கே தேசியப் பறவை! நான் வாயை மூடு என்றால் மூடித்தான ஆக வேண்டும்! என்று இறுமாப்போடு பேசியது மயில்.

'என் உரிமையை நான் பயன்படுத்தத் தடையா? தனி உரிமையைத் தனி ஒருவன் அடக்குவதா? அதற்கு நீ யார்? நீ வேண்டுமானால் தேசியப் பறவையாக இருக்கலாம். எங்களைப் போன்றவர்களைப் பகைத்துக் கொண்டால் உன்னை மட்டுமல்ல, உங்கள் இனத்தையே சிறகொடித்து விடுவோம்! தேவை இல்லாமல் வம்புக்கு இழுக்காதே, என்று எச்சரிக்கை செய்தது குயில்.

'ம்...என்னைப் பார்த்து எதிர்த்தா பேசுகிறாய்?! என்று மயில் குயிலைக் கொத்த முயன்றது.

அப்பொழுது குயில் ஒரு குரல் கொடுக்க, குயிலினமே திரண்டு மயிலைப் புரண்டு, புரண்டு விழும்படியாகக் கொத்தி அதன் இறுமாப்பை அடக்கின!

'என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள் உங்கள் இன ஒற்றுமை பற்றி தெரியாமல் அப்படிப் பேசிவிட்டேன்.

இன்று மட்டுமல்ல, இனி என்றுமே இறுமாப்பு கொள்ளமாட்டேன்' என்று சொன்னது மயில்!

தமிழ்ச்சிட்டு வெளியீட்டு உரிமை அறிக்கை!

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956)
19-ஈ. ஆ. (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்	:	சென்னை
2. காலமுறை	:	மாதம் ஒருமுறை
3. அச்சிடுவோர் பெயர்	:	திருவாட்டி. மா. தாமரை
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
4. வெளியிடுவோர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
5. ஆசிரியர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
முகவரி	:	சென்னை-5
ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவர்களும்		திரு பெருஞ்சித்திரனார் சென்னை-5.

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

-3-93 }
சென்னை-5

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

சட்டையும்-மட்டையும்

காற்றில் காய்ந்துகொண்டிருந்த ஒரு சட்டையைப் பார்த்து மட்டை கேட்டது: 'உனக்கு ஏன் இத்தனை மகிழ்ச்சிக் கூத்து?'

ம்... நான் மட்டுமா ஆடுகிறேன்; நீயும்தான் ஆடுகிறாய்! என்று எதிர் வழக்காடியது. சட்டை,

'ம்...நான் இந்த மண்ணுக்கே ஆடையைப் போல இருந்து மானங் காக்கிறேன. உன்னால் என்ன பயன்?' என்றது மட்டை.

நானுந்தான் இந்த மண்ணில் இருக்கும் மாந்தர்களின் மானததை எல்லாம் காக்கிறேன்.

'நான் மண்ணுக்குப் பெருமை சேர்க்கிறேன். நீ மாந்தனுக்குப் பெருமை சேர்க்கிறாய். அப்படி யென்றால் இந்த மாந்தன்?' சட்டையும் மட்டையும் சிந்தித்தன...

அப்பொழுது பார்த்து அந்தச் சட்டைக்குச் சொந்தக்காரனும், மட்டைக்குச் சொந்தக்காரனும் அங்கே வந்தனர்.

சட்டைக்குச் சொந்தக்காரன் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான்,மட்டைக்குச் சொந்தக்காரன் அதை வெட்டி அடுப்பில் கொண்டுபோய் வைத்தான்.

மட்டை அழ, சட்டை சிரித்துக் கொண்டே சொன்னது: 'மாந்தன் என்ன செய்கிறான் என்று கேட்டாயே இப்பொழுது புரிகிறதா?'

இப்படித்தான், மானத்தைச் காப்பவர்களின் மானத்தை சிலர் அழித்து அழிகிறார்கள்!

தமிழ்ச் 'சிட்டுகளுக்கு' ஒரு வேண்டுகோள்!

'தமிழ்ச்சிட்டு' பொறுப்பாசிரியரும், நம் பாவலரேறு ஐயா-வுமாகிய பெருஞ்சித்திரனார் அவர்கள் மக்களுக்கு நற்றொண்டாற்றுகிறார் என்பதைத் தாங்க முடியாத இந்த அரசு, ஐயா அவர்களைத் 'தடா'ச் சிறையில்அடைத்து வைத்திருக்கிறது.

கடந்த 27-1-91-அன்று முதல் சிறையில் அடைக்கப் பெற்ற ஐயா அவர்களைப் பிணையலில் விடவும் அரசு மறுத்துள்ளது,

எனவே-இளைய உள்ளங்களே! நீங்கள் கீழே குறிப்பிடப்பெறும் வரிகளை அஞ்சலட்டை ஒன்றில் எழுதி 'தமிழக முதல்வர்' தனிப் பிரிவு, தலைமைச் செயலகம், சென்னை-9—எனும் முகவரிக்கு உடனே அனுப்பிவையுங்கள்.

அஞ்சலட்டையில்,

தமிழக அரசினரே!
தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களின்
தமிழ்ப்பணியைத் தடுக்காதீர்!
உடனே அவரை விடுதலை செய்யுங்கள்!

சேலத்தில் இரும்பு பிறந்த கதை!

சேலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் இரும்புக் கனிவளம் இருக்கிறது என்று அறிஞர்கள் கிங் என்பவரும் ஃபுட் என்பவரும் உணர்த்தினர். இப்பகுதி இரும்பின் குன்றுத தரத்தைக் குறித்து ஆய்ந்து அறிவித்த பேராசிரியர் வயவர் தாமசு ஆலண்ட் என்பவர் இக்கனிப் பொருளின் தோற்றம் குறித்து ஆய்வு செய்தார். அவரின் கூற்றுபபடி பல்வேறு பாறைகளிலும் நிலததின் மேற்பரப்பிலும் காணப்படும் இரும்புக் கனியைக் கொண்ட பல மூலப் பொருள்கள் மழை, பனி மற்றும் நிலத்தின் மேற்பரப்பில் பாய்ந்தோடும் வேகமான ஆற்று நீர் இவற்றால் அடித்துச் செல்லப்பட்டு அக் காலத்தில் நிலத்திலுள்ள ஆழமான பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுச் சேர்க்கபபட்டுள்ளன. அதன் பிறகு அப்பகுதிகளில் நிலத்தின் உள்ளிருந்து நெருப்புக் குழம்புகள் வெளிப்பட்டதால் ஏற்பட்ட வெப்பத்தினால் இரும்புக்கனி அடங்கிய பொருள்கள் உருகிப் பாறைகளாக இறுகிவிட்டன. அதன் பின் பாறைகளில் இரும்புக்கனி நிறைந்திருந்த பகுதிகளெல்லாம் படுகைகளாக மற்ற கனிப் பொருள்களுக்கு நடுவே பாதுகாக்கப்பட்டுக் கனிப்பொருள் தொகையாக மாறி விட்டன என்றும கூறுகிறார்.

சுருங்கக்கூறின் சேலத்துக் கனிப்பொருள் தொகை, படிவுக் கனிப்பொருள் தொகையாகத் தோன்றிப் பின் நிலத்தின் இயக்கததினால் ஏற்பட்ட மிக அதிக வெப்பத்தாலும்அழுத்தும் ஆற்றலாலும் தாக்கப்பட்டு உருமாறிய கனிப்பொருள் தொகையாக மாறியதாகும் என்று அவர் விளக்குகிறார்.

பிறகு ஆய்வு நடத்திய பலரும் தந்த முடிவுகள் இவருடைய கருத்தை ஒத்திருந்தன. ஆனால் திரு இராமநாதன் என்ற ஆய்வாளர் மட்டும் நெருப்புக் குழம்பினின்றும் இரும்புச் சாரங்கள் பிரிக்கப்பட்டு, அக் குழம்புகள் வெளிப்படுமபோது அவற்றுடனே இறுகிவிட்டவையே சேலத்து இருமபுக் கனிப்பொருள்கள என்று கூறினார். அவர் கூற்றுப்படி சேலத்து இரும்பு "நெருப்புக் கனிப் பொருள் தொகை"யின் வகையாகிறது.

திரு.சரவணன் என்பவர் 1958-இல் ஆராய்ச்சி செய்தபோது தனிப்படுகைகளைச் சூழ்ந்துள்ள எக்ளோஜைட் (Eclogite) எனும் மிக உயர்வான அழுத்தும் திறனாலும், வெப்பத்தினாலும், உருமாற்றப்பட்ட பாறைகளாகத்தான் இருக்க முடியும் என்றும ஆகவே இது "உருமாறிய கனிடபொருள் தொகை" (Metamorphic Mineral Deposit) வகையாகத்தான் இருக்க வேண்டும என்றும் முடிவு செய்தார். அடுத்து உருமாறிய பாறைகளுடன் கலந்த உருமாறிய கனிப்பொருள், மாற்றத்திற்குமுன் எந்த நிலையிலிருந்தது? அவை நெருப்பு கனிப்பொருள் தொகையா? படிவுக் கனிப்பொருள் தொகையா? என்பதைக் கண்டறிய வேண்டியிருந்தது.

ஓர் இடத்தில் இரும்புக் கனி எவ்வாறு தோன்றியிருக்கக் கூடும்' என்று கண்டறிய, பின் வரும் விளக்கங்கள் அறியப்பட வேண்டும்.

1) அந்த இடத்தில் இருக்கும், இரும்புக் கனிகளில் டைடேனியம் என்ற மூலகம் எந்த அளவுக்கு கலந்துள்ளது?

2) இரும்புக் கனிகளுடன் கலந்திருக்கும் மற்ற கனிவளங்கள் (தாதுக்கள்) இயல்பாக நெருப்புப் பாறைகளில் கிடைப்பனவா?

3) கனிப் படுகைகளுக்கும் அருகிலிருக்கும் நெருப்புப் பாறைகளுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா?

4) கனிப் படுகைகளில், படிவுப் பாறைகளுக்கு மட்டும் உரித்தான ஒரு சில அறிகுறிகள் தென்படுகின்றனவா?

சேலத்து இரும்புக் கனி பற்றி அவர் நடத்திய ஆராய்ச்சியில் இக் கேள்விகளுக்குக் கிடைத்த விடைகள்:

1) 'டைடேனியம்' எங்கோ ஒரு சில இடங்களில் மிகக் குறைவான அளவில் மட்டும் கலந்துள்ளது.

2) மற்ற 'தாதுக்கள்' இயல்பாக நெருப்புப் பாறைகளில் கிடைப்பனவாக இல்லை.

3) கனிப் படுகைகளுக்கும் அருகிலிருக்கும் நெருப்புப் பாறைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

4) இயல்பான படிவுப் பாறைகளுக்கே உரித்தான குறியீடுகள் அதிகம் காணப்படாவிடினும் ஆங்காங்கே சில அறிகுறிகள் தென்படுகின்றன.

இதனால் சேலத்து இரும்புக் கனி நெருப்புக் குழம்பினின்று தோன்றியவையல்ல என்று தெரிகிறது. 4-ஆம் விடை இப் படுகை படிவுக் கனிப் பொருள் தொகையைச் சார்ந்தது என்று தெரிவிக்கிறது. இப்படுகைகள் உருமாறுவதற்குக் காரணியமாயிருந்த வெப்பத்தின் அளவும் அழுத்து ஆற்றலின் அளவும் மிக அதிகமாக இருந்தால் பொதுவாகப் படிவுப் பாறைகள் உருமாறும்போது பாதுகாக்கப்படும் சில குறியீடுகள் பாதுகாக்கப்படாமல் போயிருக்கலாம். அதனால் இக்குறியீடுகள் எல்லாப் பகுதிகளிலும் காணப்படாமல் ஒரு சில இடங்களில் மட்டும் தெரிகின்றன.

ஆகவே சேலத்து இரும்பு, படிவுப் பறைகளின் நடுவே படிவுக் கனிப் பொருள்களாகப் பிரிந்து அவற்றின் பிறகு ஏற்பட்ட மாறுதல்களின் விளைவால் உருமாற்றப்பட்டு விட்டன என்ற முடிவுக்கு இவர் வந்தார். நன்றி: "சேலத்து இரும்பு" நூல் (பண்டாரகர் ச.சரவணன் அவர்கள் எழுதியது). O

உணவுப் பொருள்கள் பற்றிய அடிப்படை உண்மைகள்.

நாம் உண்ணும் உணவில் உள்ள சாரப் பொருள்களை மாவு (Carbohydrate), புரதம் (Protein), கொழுப்பு (fat), உயிரூட்ட சாரங்கள் (Vitamins) மற்றும் பலவகைக் கனிமச்சாரங்கள் என ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

நம் உணவிலே பொதுவாக இடம் பெறும் அரிசி, கம்பு, சோளம், கேழ்வரகு, கோதுமை ஆகியவற்றில் அதிகமாக உள்ளது மாவுச் சாரமே.

புழுங்கல் அரிசியில்	78.9%
கேழ்வரகில்	72.7%
கோதுமையில்	71.2%
கம்பில்	67.1%
சோளத்தில்	72.4%

மாவுப் பொருளே உள்ளது. இம் மாவுப் பொருள் உடலுக்குத் தேவையான ஆற்றலைத் தருகிறது. கடலை, பருப்பு, போன்றவற்றிலும் உருளை, மரவள்ளி, சீனிக்கிழங்கு போன்ற கிழங்கு வகைளிலும் வாழை, மா போன்ற பழங்களிலுமம நிறைய மாவுப் பொருள் உள்ளது. சீனியும் வெல்லமும ஆற்றல் மிக்க மாவுப்பொருளே. உண்டவுடன் நிறைவையளிக்கும் இம்மாவுப் பொருள் ஒரு கிராம் எடைக்கு 4 கலோரி மேனி ஆற்றலைத் தருகிறது. (ஒரு கலோரி என்பது ஒரு கிராம் நீரை ஒரு பாகை செல்சியசுக்கு சூடேற்றத் தேவைப்படும் வெப்ப அளவு ஆகும்). இந்த வெப்ப அளவாகிய கலோரியை அடிப்படையாகக் கொண்டு உணவுப் பொருள்கள் நம் உடலுக்குத் தரும் ஆற்றலின் அளவு கணக்கிடப் படுகின்றது.

உடலுக்குத் தேவையான ஆற்றலைத் தரும் மற்றொரு பொருள் 'புரதம்' (புரோட்டின்). ஒரு கட்டிடம் எழுப்பச் செங்கற்கள் பயன் படுவதைப் போன்றே உடலின் பகுதிகளை அமைக்க இது பயன் படுகிறது. நுண்ணறைகள் (Cell) வளர்வதற்கும் இது இன்றியமை-யாதது. உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று உயிர் வளி (ஆக்சிசன்)யைத் தந்து கழிவுப் பொருள்களை அகற்றும் பணியைப் புரிகிற அரத்தத்தில் உள்ள 'பிசிதமும்' (பிளாஸ்மா), செவ்வணுக் களில் உள்ள அரத்த நிறமியும் (ஈமோகுளோபின்) 'புரதப்' பொருட்களே. தலைமுறைக் குணங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் இனக்கீற்றுகளும் இவ்வூட்டப் பொருளே உடம்பில் நடைபெறும் வேதியியல் வினைகளுக்குக் கரணியமாக இருக்கும் இப்புரதப் பொருள் 22 அமினோக் காடிகளின் பல்லாயிரம் வகைச் சேர்க்கைகளைக் கொண்டதாகும்.

உணவுப்பொருளில் ஊட்டம் இரண்டு வகைகளாகக் கிடைக்கின்றன. மீன், கல்லீரல், இறைச்சி, முட்டை, பால் ஆகிய வற்றிலிருந்து கிடைக்கும் விலங்கினப் புரதம் ஒருவகை; பருப்பு, பயிறு வகைகள், கடலை முந்திரிப்பருப்பு, சோயா பீன்சு, வேர்க்கடலை முதலியவற்றிலிருக்கும் நிலைத்திணை (தாவரம்) ஊட்டம் மற்றொரு வகை.

மீனில்	14.5%	சோயா அவரை	43 2%
ஆட்டு ஈரலில்	19.3%	வேர்க்கடலையில்	26.7%
இறைச்சியில்	18.5%	பருப்பில்	22.3%
முட்டையில்	13.3%	முந்திரிப்பருப்பில்	21·2%
பாலில்	3.3%	கோதுமையில்	11.8%
		அரிசியில்	6.4%
விலங்கின ஊட்டப் பொருள் உள்ளது.		கேழ்வரகில்	7·1%
		கொத்துமல்லி இலையில்	3 3%
தக்காளி, பீட்கிழங்கு, கத்தரிக்காய், கீரை ஆகியவற்றில்			1.%
		மாம்பழத்தில்	0.6%
		அரத்திப்(ஆப்பிள்)பழத்தில்	0.3%

நிலைத்திணை ஊட்டப் பொருள் உள்ளது. இவ்விரண்டு வகையுள் விலங்கின ஊட்டம் முதல் தரமானது. தாவர ஊட்டததை விடச் சிறந்தது. விலங்கின ஊட்டம் எளிதில் செரிக்கும் தன்மையுடையது. இரண்டுவகைப் புரதப் பொருள்களையும் கலந்து உண்டால் அதன் ஆற்றல் இவ்விரண்டின் தனித்தனி ஆற்றலை விட அதிகமாக இருக்கும். எடுத்துக் காட்டிற்கு அரிசி, பருபபு, பால், தயிர் இவற்றைத் தனித்தனியே உண்ணும் போது கிடைக்கும் ஊட்டத்தை விடச் சேர்த்து உண்ணும்போது தரத்திலும் ஆற்றலிலும் உயர்ந்த ஊட்டம் கிடைக்கிறது. மாவுப் பொருளைப் போன்றே ஊட்டமும் ஒரு கிராம் எடைக்கு 4 கலோரி ஆற்றலைத் தருகிறது.

உடலில் நிகழும் இயக்கங்களுக்கும் வளர்ச்சிக்கும் புரதம் அடிப்படை ஆதலால் நமக்குத் தேவையான ஆற்றலைப் பெறுவதற்கு மாவுச்சாரத்துடன் போதிய அளவு புரதத்தையும் உட்கொள்ளுவது தேவை ஆகும். உணவிலுள்ள புரதப் பொருள் செரிக்கப்படும்போது அமினோக் காடிகளாக (Aminoacid) ஆக்கப் பட்டு குடலிலிருந்து உறிஞ்சப்பட்டு அரத்தத்தில் கலக்கிறது, பின் அதிலிருந்து நம உடல் வளரத் தேவையான புரதம் பல அமினோக் காடிகளின் இணைப்பாக்கத்தால் (Synthesis) உருவாகிறது. நம் உடலுக்கு 22 வகையான அமினோக் காடிகள் தேவை. இவைஅனைத்தும் ஏதாவதொரு உணவில் புரதத்திலிருந்து எடுத்துக் கொள்ள இயலாது. ஏனெனில் எட்டுவகையான அமினோக் காடிகள் நம்

உடலில் உருவாக்க முடியாதவை. இவற்றுக்கு இன்றியமையாத (Essential) அமினோக் காடிகள் என்று பெயர். இவை பால், முட்டை, இறைச்சி, மீன் முதலியவற்றில்தான உள்ளது. எனவே மீன், இறைச்சி முதலியவற்றை உண்ணுவிட்டாலும் பால் உட்கொள்வதை மட்டும் நிறுத்தக கூடாது.

நம் உணவில் காணப்படும் மூன்றுவது சாரம் கொழுப்புப் பொருள். கொழுப்பு, உடலில் எரிபொருளாக எரிந்து ஆற்றலைத் தருகிறது. கொழுப்பு ஒரு கிராம் எடைக்கு 9 கலோரி ஆற்றலைத் தரும். தேங்காய் நெய், எள்நெய், கடலைநெய், கடுகுநெய், நிலைத்திணை நெய், பால்நெய் ஆகியவற்றில் கொழுப்பு இருக்கிறது.

அன்றாட தேவையை விட அதிகமான கொழுப்பு உணவில் சேரும் போது அது உடலின் வருங்காலத் தேவைக்குச் சேர்த்து வைக்கப்படுகிறது. எனவேதான் கொழுப்பு உணவில் அதிகமாகும போது உடல் பருத்து முகாமையாக வயிறுப் பகுதியில் தேங்கித் தொப்பை விழுகிறது.

நிலைத்திணைக் கொழுப்பாகிய எள்நெய், தேங்காய்நெய் முதலியவற்றில் கொழுப்புச் சாரம் மட்டுமே உள்ளது. ஆனால், வெண்ணெய், நெய், மீன்நெய் போன்ற விலங்குக் கொழுப்பில் கொழுப்புச் சாரம் மட்டுமன்றி ஏ (A) மற்றும் டி (D) உயிருட்டச் சாரங்களும் உள்ளது.

வேர்க்கடலையில்	40.1%
சோயா அவரையில்	20.3%
இறைச்சியில்	13.3%
முட்டையில்	13.3%
கடலையில்	5·3%
முந்திரிப்பருப்பில்	4.9%
பாலில்	3.6% கொழுப்புப் பொருள் உள்ளது,

முட்டை, பால் இவற்றில் காணப்படும் கொழுப்பு எளிதில் செரிக்கிறது. நாள் தோறும் ஒருவருக்கு ஏறத்தாழ 50 முதல் 60 கிராம் கொழுப்புச் சாரம் தேவைபடுகிறது. (தொடரும்)

நன்றி, —மருத்துவர் ச. ஞானசௌந்தரி
அவர்களின் "மணப்பேறும் மகப்பேறும்" நூல்.

அன்பர்கள் கவனிக்க!

ஐயா அவர்களின் வழக்குச் செலவுகளுக்குப் பங்கேற்றுக் கழகத்தினரும் அன்பர்களும் ஆர்வலர்களும் நன்கொடை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். —அமைச்சர்.

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

1. நாரு—(NAURU)—குடியரசு.

நிலப்பரப்பு : 2,13 ச.அ.மா.
மக்.தொ : 8,400
மக்.தொ.பெ : 1.5%
மக்.வா.எ : விளக்கம் இல்லை
எழுத்தறிவு : 99%
தலைநகர் : யரென்
மொழி : நாருவன், ஆங்கிலம்
நாணயம் : ஆத்திரேலியன் டாலர் = 100 சென்ட்ஸ்.

2. கிரிபடி—(KIRIBATI)—குடியரசு.

நிலப்பரப்பு : 886 ச.அ.மா
மக்.தொ : 60,000
மக்.தொ.பெ : விளக்கம் இல்லை
மக்.வா.எ : ,,
எழுத்தறிவு : ,,
தலைநகர் : பைய்ரிக்கி
மொழி : கிரிபடி, ஆங்கிலம்
நாணயம் : ஆத்திரேலியன் டாலர் = 100 சென்ட்ஸ்.

3. பாப்புவா புது கினியா—(PAPUA NEW GUINEA)

நிலப்பரப்பு : 4,61,691 ச.அ.மா
மக்.தொ. : 32,60,000
மக்.தொ.பெ : 2.7%
மக்.வா.எ : ஆண் : 51, பெண் : 50 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 32%
தலைநகர் ; போர்ட் மொரஸ்பி
மொழி : ஆங்கிலம், பல உள்ளூர் மொழிகள்
நாணயம் : கினு = 100 டோ,

4. சாலமன் தீவுகள்—(SOLOMON ISLANDS)

நிலப்பரப்பு : 2,9,785 ச.அ.மா
மக்.தொ : 2,58,000
மக்.தொ.பெ : 3.0%
மக்.வா.எ : விளக்கம் இல்லை.
எழுத்தறிவு : ,,
தலைநகர் : ஹோனியாரா

மொழி . ஆங்கிலம், பல உள்ளூர் மொழிகள்
நாணயம் : சாலமன் தீவு டாலர் = 100 சென்ட்ஸ்.

5, துவாலு(**TUVALU**)

நிலப்பரப்பு : 2,46 ச.அ.மா
மக் தொ. : 7,300
மக். தொ பெ : 1.6%
மக்.வா.எ . ஆண் : 57, பெண் : 59 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : விளக்கம் இல்லை,
தலைநகர் : ஃபுனுபுடி
மொழி : சமோயான். ஆங்கிலம்
நாணயம் : ஆத்திரேலியன டாலர் = 100 சென்ட்ஸ்.

6. மேற்கு சமோயா—(**WESTERN SAMOA**)—

நிலப்பரப்பு . 2,831 ச அ.மா
மக். தொ : 15,6,0 00
மக். தொ. பெ : 1.3%
மக். வா. எ . 63%
எழுத்தறிவு : 90%
தலைநகர் : ஏபியா
மொழி : சமோயான், ஆங்கிலம்
நாணயம் : தலா = 100 சீனி.

7. வனுது—(**VANUTU**)—குடியரசு.

நிலப்பரப்பு : 1,4,763 ச.அ.மா
மக். தொ : 1,17,000
மக் தொ. பெ : 2.7%
மக். வா. எ : விளக்கம் இல்லை
எழுத்தறிவு : ,,
தலைநகர் : விலா,
மொழி : பிசுலாமா, ஆங்கிலம், பிரெஞ்சு.
நாணயம் : வது

8. ஃபிஜி—(**FIJI**)

நிலப்பர்ப்பு : 18,376 ச.அ.மா
மக். தொ : 6,70,000
மக். தொ. பெ : 1.8%
மக். வா. எ : ஆண் : 70, பெண் : 73, (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 75%
தலைநகர் : சுவா
மொழி : ஆங்கிலம், பிஜியன், இந்துஸ்த்தானி
நாணயம் : பிஜியன் டாலர் = 100 சென்ட்ஸ்.

தெரிந்து கொள்ளுங்கள்

❖ பாராளுமன்றத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு ஒவ்வொரு நிமையத்திற்கும் உரு 2000 செலவாகிறது.

❖ இந்தியாவில் இதுவரை 15 மொழிகளே தேசிய மொழிகளாக இருந்தன. கடந்த 20-8-92 முதல் நேபாளி, மணிப்புரி, கொங்கணி ஆகிய மூன்று மொழிகளும் இந்தப் பட்டியலில் சேர்க்கப் பெற்றன. இப்பொழுது சட்டப்படி, அசாமி, வங்காளி, குசராத்தி, இந்தி, கன்னடம், காசுமீரி, மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சமசுகிருதம், சிந்தி, தமிழ், தெலுங்கு, உருது, நேபாளி, மணிப்புரி, கொங்கணி— ஆகிய 18 மொழிகளும் தேசிய மொழிகள்.

❖ கொடிமுந்திரி(திராட்சை)ப் பழம் பல மருத்துவப் பயன்களைக் கொண்டது. நோய் உண்டாக்கும் நச்சுயிரிகளைக் கொல்லும் ஆற்றல் அதற்கு உண்டு. ஏ,பி,சி சாரங்கள் (விட்டமின்கள்) அதில் உள்ளன. அஃது ஒரு சாரவுணவு. மலச்சிக்கலை அது போக்குகிறது. வயிற்றுப் புண்ணை ஆற்றுகிறது. குருதியை அது தூய்மைப் படுத்துகிறது. ஒற்றைத் தலைவலி, மூட்டுப் பிடிப்பு. மூளைக்கோளாறு, புற்று நோய், தொழுநோய் ஆகிய-வற்றைக் கூட நலப்படுத்தும் மருத்துவக் குணங்கள் உண்டு என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

❖ உலக அளவில் ஞெகிழிப் (பிளாஸ்டிக்) பொருள்களின் பயன்படுத்தம் 60 கிலோ எடை என்றால், உலக நாடுகளின் சராசரிப் பயன்படுத்தம் 13 கிலோவாகும். ஆனால் இந்தியாவின் அளவு இப்பொழுதுதான் ஒரு கிலோவை எட்டியுள்ளதாம். இந்தியா-வில் இப்பொழுது 23,000 ஞெகிழித் தொழிற்சாலைகள் உள்ளனவாம்.

❖ ஓய்வாக இருக்கும் பொழுது நாம் உட்கொள்ள நமக்கு ஒரு நிமையத்திற்கு எட்டு பதின்(லிட்டர்) அளவு காற்று தேவைப் படுகிறது. ஆனால் நடக்கும் பொழுது அதைப்போல இரண்டு மடங்குக் காற்று தேவைப்படுகிறது.

❖ உலகில் ஏறத்தாழ ஓர் இலக்கம் வகையான பட்டுப் பூச்சிகளும் வண்ணத்துப் பூச்சிகளும் உள்ளன என்று பூச்சியியலாளர்கள் கூறுகின்றனர்.

❖ 1945-ஆம் ஆண்டில் அமெரிக்கா, சப்பானிலுள்ள ஈரோசிமா நகர் மீது வீசிய அணுக்குண்டின் ஆற்றல் 0.013 'மெகாடன்' வெடி மருந்துக்குச் சமமானது. அதுவே ஓர் இலக்கம் பேரைக் கொன்றுவிட்டது. ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்

வெளியான புள்ளி விளக்கப்படி வல்லரசுகளிடமுள்ள அணுகுண்டுகளின் ஆற்றல் 12 இலக்கம ஈரோசிமா குண்டுகளுக்குச் சமமாம். இந்த அளவு 15,000 'மெகா டன்' வெடிபபு ஆற்றலுக்குச் சமமானது. இன்றைய நிலையில் உலக நாடுகளிலுள்ள அத்தனை நகரங்களையும் அழிக்க வேண்டுமானால் 300 'மெகா டன்' வெடிப்புத்திறனுள்ள குண்டுகளே போதுமானவை என்று குறிப்பிடுகிறார்கள் அறிவியலறிஞர்கள். அமெரிக்காவிடம் மட்டுமே இப்பொழுது அணுக் கருவிகளை உலகின் எந்த இடத்திற்கும் வீசியெறியும் ஏவுகணைகளைக் கொண்ட 33 நீர் மூழ்கிக் கப்பல்கள் அணியமாக வைக்கப் பெற்றுள்ளனவாம்.

∴ கர்நாடகத்தில் உள்ள 4 சிற்றூர்களைத் தவிர மற்ற 52,000 கம்மங்களுக்கும் (கிராமங்களுக்கும) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு விட்டது என்று அந்த அரசு தெரிவித்துள்ளது. தமிழகத்தில் இன்னும் பன்னூற்றுக் கணக்கான ஊர்களுக்குக் குடி நீர் வழங்கப்படவில்லை.

∴ காவல் துறையில் பணியில் இருக்கும் பொழுதே உயிரிழக்கும் காவலர்களின எண்ணிக்கை உலகிலேயே இந்தியாவில்தான் அதிகமாம். தீவிர நடவடிக்கையாளர்களுடனான மோதல்களிலும், சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கும் போதும், மதுவிலக்கு வழக்குகளில் குற்றவாளிகளைத் தளை செய்யப் போகும் போதும காவலர்கள் உயிரிழக்க வேண்டியுள்ளது.

ஆண்டுதோறும், இந்தியாவில் 714 காவலர்களும், அமெரிக்காவில் 80 காவலர்களும், பிரிட்டனில் 2 காவலர்களும் உயிரிழக்கின்றனர். 1981 முதல் 1991 முடிய உள்ள 10 ஆண்டுகளில் இந்தியாவில் 7,144 காவலர்கள் மாண்டுள்ளனராம்.

∴ உலக அளவில் ஆண்டுதோறும் 80க்கும் மேற்பட்ட புயல்கள் உருவாகின்றனவாம். இவற்றில் 7 விழுக்காட்டுப் புயல்கள் இந்தியக் கடற்கரையைத் தாக்குகின்றனவாம. வங்காள விரிகுடாவில் தோன்றும் புயல்கள் அரபிக் கடலில் உருவாகும் புயல்களைக் காட்டிலும் 5 பங்கு ஆற்றல் வாய்ந்தனவாக உள்ளன என்று புள்ளி விளக்கங்கள் தெரிவிக்கின்றன என்று இந்திய வானியல் துறை கூறுகிறது.

∴ இந்தியாவில் பயிர் செய்யத் தகுதியுடைய நிலப்பகுதியில் 20 விழுக்காட்டு அளவுக்கே நீர்ப்பாசன வசதி உள்ளது.

∴ தமிழ் நாட்டின் மக்கள் தொகை, இந்திய மக்கள் தொகையில் 7 விழுக்காடு ஆகும். ஆனால் தமிழ் நாட்டிற்கு இந்தியாவில் கிடைக்கும் மொத்தத் தண்ணீரில் 3 விழுக்காட்டு அளவே

கிடைக்கிறது. உலக அளவுப்படி, ஆண்டிற்கு ஒருவருக்கு நிகர் சரியாக 2.45 இலக்கம் கன அடி கிடைக்க வேண்டும். ஆனால், இந்த அளவு கேரளத்தில் ஓர் இலக்கம் கன அடியாக-வும், கருநாடகத்தில் 93 ஆயிரம கன அடியாகவும், தமிழ் நாட்டில் 26 ஆயிரம் கன அடியாகவுமே உள்ளது,

∴ உலக வணிகத்தில் இந்தியாவின் பங்கு 1950-இல் 2 விழுக்காடாக இருந்தது. ஆனால் 1980-இல் இது 0.5 விழுக்காடாகக் குறைந்து விட்டது. 1991 இலோ இது மேலும் குறைந்து 0.4 விழுக்காடாக ஆகிவிட்டது.

∴ இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலமொழி பயிற்று மொழியாகியது 1835-இல்.

0 "அரசின் நடவடிக்கை அறமன்றத் துறையை அச்சுறுத்து-வதாக இருக்கக் கூடாது; அரசு சட்டத்துக்கு உட்பட்ட-வகையிலேயே இயங்க வேண்டும். அரசு ஒவ்வொரு கட்டத்திலும் சட்டத்தை மதிக்கிறது என்பதைப் பொது மக்களுக்கு உணர்த்த வேண்டும்' அறமன்ற நடுவர்கள் அரசின் நடவடிக்கைகளால் அச்சமடையக் கூடாது" — என்று உயர்நெறி மன்ற நடுவர்கள் மிசுரா, பத்மினி சேசுதுரை இருவரும், கடந்த அக்டோபர் 1-இல் சென்னை உயர்நெறி மன்ற வழக்கு ஒன்றில் கருத்துக் கூறியுள்ளனர்.

∴ தமிழகக் காவல் துறையினர் மொத்தம் 69,000. காவல் துறைக்கு ஓர் ஆண்டிற்கு ஆகும் செலவு. உரு. 250 கோடி. ஆனால் 1000 கோடி தேவைப்படும் என்று ஒரு கருத்தரங்கில் காவல் துறை ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

∴ தமிழில் உள்ள கழக இலக்கியம் '**அகநானூறு**' என்னும் நூலுக்கு 'நெடுந்தொகை' என்று ஒரு பெயரும உண்டு.

∴ சிலரை 'ஆஜானுபாஹு'வாக இருக்கிறார் என்று சொல்கிறார்-கள். 'ஆஜானுபாஹு' எனபதற்கு முழங்கால் வரை நீண்ட கைகளை உடையவர் என்று பொருள்.

∴ திண்ம, நீர்ம, வளிப் பொருள்களில் சேராத ஒருவகைப் பொருளே குருதியில் உள்ள 'பிளாஸ்மா' (Plasma) என்னும் ஊனீர்ப் பொருள்.

∴ சங்கைக் காதில் வைத்துக் கேட்கும் பொழுது உண்டாகும் ஒலி கடல் இரைச்சலோ, ஓங்கார ஒலியோ அன்று; நம் அரத்த ஓட்டத்தின் ஒலியே அது.

∴ தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலையின்றிக் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 34.66 இலக்கம்.

மாசுக்கோ நூல் காட்சியகம்.

மாசுக்கோவில் வியக்கத்தக்க நூல் நிலையம் ஒன்று உள்ளது; இங்கு மிகத் தொன்மையான 800 நூல்கள் உள்ளன. இவற்றுள் சில நூல்கள் கிறித்து பிறப்பதற்கு 4000-2000 ஆண்டுகள் முந்தினவை; புத்தரின் அறிவுரைகளும், விசிறி வடிவத்தில் பனை ஓலைகளில் எழுதப் பெற்ற ஒரு நூலும, சுருள் வடிவத்தில அமைந்த ஒரு நூலும், காற்றிசைப் பெட்டியைப் போல் விரிந்து சுருங்கும் ஒரு நூலும், இங்கு குறிப்பிடத்தக்கவை.

இந்தியா, சீனா, கொரியா, சப்பான், பழைய உருசியா ஆகியவற்றின் பழம்பெரும் நூல்களும் இங்குக் காட்சி அளிக்கின்றன. 1496-இல் அச்சான பிரெஞ்சு நூல் ஒன்றும், 1496-இல் வெனிசு நகரில் வெளியிடப்பெற்ற முதலாவது பிளினியசு எழுதிய இயற்கை வரலாற்று நூலின் அழகிய பதிப்பும், இந்த நூல் நிலையத்தின் சிறப்பாக விளங்குகின்றன.

1564-இல் மாசுகோவில் இவான் பியாதரோவ் அச்சிட்டு வெளியிட்ட "அப்போசில்" ("திருத்தொண்டர்") என்னும் முதலாவது உருசியநூலும், பீட்டர் சக்கரவர்த்தியால் நிறுவப் பெற்ற "வெதமோசுதி" என்னும் முதலாவது உருசிய இதழும் இங்குள்ளன.

19-ஆம் நூற்றாண்டின் நடுவில் உருசியாவில் பதிப்பிக்கப்பட்ட 27 விரற்கடை பருமனுள்ள மிகச் சிறிய நூலும், ஓர் ஆள் உயரத்தில் பாதி அளவுள்ள மிகப் பெரிய நூல் ஒன்றும் இந்த காட்சியகத்தில் உள்ளன.

O

∴ இந்த உலகில் வாழும் உயிரிகளில் மிகப் பெரியது திமிங்கிலந்தான்! பார்ப்பதற்கு மீன் வடிவத்தில் தோன்றினாலும் இது குட்டிப் போட்டுப் பால் கொடுக்கும் விலங்குவகையைச் சேர்ந்தது. யானையை விடப் பல மடங்கு பெரியது; எடையுடையது.

∴ தமிழகத்தில் இன்றைய நிலையில் 78 இலக்கம் பேர் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருக்கின்றனர் என்று மதிப்பிடப் பெற்றுள்ளது.

∴ மேலை ஐரோப்பிய நாடுகளில் இப்பொழுதும் பெரும்பாலும் கன்னெய் (பெட்ரோல்) இயங்கிகளுக்குப் பகரமாக மின்சார இயங்கிகள் புழக்கத்துக்கு வந்துள்ளன.

∴ இந்தியாவில் புற்று நோயால் ஏறத்தாழ 20 இலக்கம் பேர் துன்புறுகிறார்கள். இதுவன்றி ஆண்டுக்கு ஏறத்தாழ 5 இலக்கம் பேர் புற்று நோயால் புதிதாகத் தாக்கப்படுகின்றனர்.

∴ நினைவாற்றலை வளர்க்க வல்ல கீரை வல்லாரை என்றும், காய் வெண்டைக்காய் என்றும் கூறப் பெறுகிறது.

O

ஈகி சங்கரலிங்கனர்.

சில தலைவர்கள் சில நேரங்களில் சில வேண்டுகோள்களை முன் வைத்துச் சாகும் வரை உண்ணு நோன்புப் போராட்டம் என்று அறிவிப்பார்கள். ஆனல் வேண்டுகோள் நிறைவேரு விட்டாலும போராட்டத்தை நிறுத்தி விடுவார்கள். ஆனல் சொன்னபடியே இப்போராட்டத்தை நடத்திச் செத்தவர்களும் உண்டு. அப்படி வரலாருய் விளங்குகின்றவர்களுள் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் இருவர். ஒருவர் ஈழத்து இளங்காளை திலீபன் என்ற பெரும் ஈகி. மற்றொருவர் நம் தமிழகத்து முதுகாளை ஈகிசங்கரலிங்கனர். அதுவும் இக் தமிழ்நிலத்திற்குச் சென்னை மாநிலம் என்றுள்ள பெயரை நீக்கி தமிழ் நாடு என்றே பெயர்ச்சூட்ட வேண்டும் என்பதற்காக உயிர் துறந்தார் அவர்.

அயலவர் ஆட்சி அரசியல் நிலைகளால் சென்னை மாநிலம் என்று நம் தமிழகம் அழைக்கப்பட்டபோது 'தமிழ் நாடு' என பெயர் சூட்டத் தமிழ் மக்களிடமிருந்து வேண்டுகோள் அரசுக்குச் சென்றது. 1960-இல் சென்னை மாநகராட்சி ஒரு மனமாக இதற்குத் தீர்மானம் இயற்றியது. பல அமைப்புகள் இதற்காகப் போராடப் போவதாய் அறிவிப்புகள் செய்தன. 1962-இலும் 1963 இலும் நாடாளுமன்றத் தில் இதற்காக அண்ணுவாலும பொதுவுடைமைக் கட்சியாலும் கொண்டுவரப் பட்ட தீர்மானங்களை நாடாளுமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

தமிழக மக்களின் வேண்டுகோளைப் பேராயக்கட்சி ஆட்சி புறக் கணித்துக் கொண்டிருந்த சூழலில் அதே கட்சியைச் சேர்ந்த ஈகி சங்கரலிங்கனர் இந் நோக்கத்திற்காகச் சாகும் வரை உண்ணு நோன்பை 27-7-56-இல் தொடங்கினர். அரசு செவிசாய்க்கவில்லை. அண்ணு, ம.பொ.சி. காமராசர். கக்கன் முதலியோர் அவரைச் சந்தித்துப் போராட்டத்தைக் கைவிடுமாறு வேண்டினர். அவரோ உயிர் பெரிதன்று மானமே பெரியது என்று போராட்டத்தைக் கைவிட மறுத்து விட்டார்.

நாளடைவில் அவர் உடல் நலிவுற்றது. ஆனலும் அரசு அலட்டிக் கொள்ளாமல் அமைதியாய் கிடந்தது. உடல் நிலை மிகவும் மோசமடைந்த நிலையில், ஈகி சங்கரலிங்கனரைக் காவல் துறையினர் 10-10-56 அன்று மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கேயும் தன் போராட்டத்தை நிறுத்திக் கொள்ள மறுத்துத் தமக்கு உணவு செலுத்தப்படுவதை எதிர்த்தார். இதனல் 13-10 56 அன்று அந்தப் பெருந்தகையின் உயிர் பிரிந்தது.

தமிழக மக்கள் கண்ணீர் மழைப் பொழிந்தனர். தலைவர்கள் மதிப்புச் செலுத்தினர். மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து வீர வணக்கம் செலுத்தினர். பல அமைப்புகளும் கட்சிகளும் பொதுக் கூட்டங்கள் நடத்தி அன்னருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

1967-இல் தமிழகத்தில் அண்ணு தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன்பிறகு ஈகி சங்கரலிங்கனர் விரும்பிய தமிழ் நாடு பெயர் சூட்டப் பெற்றது. ஓங்குக ஈகி சங்கரலிங்கனரின் புகழ்! O

தமிழ் நாள் காட்டி

பெரிய எண் தமிழ் நாள்; சிறிய எண் ஆங்கில நாள்

திருவள்ளுவர் ஆண்டு 2024

கிழமை	சுறவம் (தை) சனவரி - பிப்ரவரி					கும்பம் (மாசி) பிப்ரவரி - மார்ச்சு				
ஞாயிறு		4 17	11 24	18 31	25 7		3 14	10 21	17 28	24 7
திங்கள்		5 18	12 25	19 1	26 8		4 15	11 22	18 1	25 8
செவ்வாய்		6 19	13 26	20 2	27 9		5 16	12 23	19 2	26 9
அறிவன்		7 20	14 27	21 3	28 10		6 17	13 24	20 3	27 10
வியாழன்	1 14	8 21	15 28	22 4	29 11		7 18	14 25	21 4	28 11
வெள்ளி	2 15	9 22	16 29	23 5		1 12	8 19	15 26	22 5	29 12
காரி	3 16	10 23	17 30	24 6		2 13	9 20	16 27	23 6	30 13
	மீனம் (பங்குனி) மார்ச்சு - ஏப்ரல்					மேழம் (சித்திரை) ஏப்ரல் - மே				
ஞாயிறு	1 14	8 21	15 28	22 4	29 11		5 18	12 25	19 2	26 9
திங்கள்	2 15	9 22	16 29	23 5	30 12		6 19	13 26	20 3	27 10
செவ்வாய்	3 16	10 23	17 30	24 6	31 13		7 20	14 27	21 4	28 11
அறிவன்	4 17	11 24	18 31	25 7		1 14	8 21	15 28	22 5	29 12
வியாழன்	5 18	12 25	19 1	26 8		2 15	9 22	16 29	23 6	30 13
வெள்ளி	6 19	13 26	20 2	27 9		3 16	10 23	17 30	24 7	
காரி	7 20	14 27	21 3	28 10		4 17	11 24	18 1	25 8	
	விடை (வைகாசி) மே - சூன்					ஆடவை (ஆனி) சூன் - சூலை				
ஞாயிறு	31 13	3 16	10 23	17 30	24 6		6 20	13 27	20 4	27 11
திங்கள்	32 14	4 17	11 24	18 31	25 7		7 21	14 28	21 5	28 12
செவ்வாய்		5 18	12 25	19 1	26 8	1 15	8 22	15 29	22 6	29 13
அறிவன்		6 19	13 26	20 2	27 9	2 16	9 23	16 30	23 7	30 14
வியாழன்		7 20	14 27	21 3	28 10	3 17	10 24	17 1	24 8	31 15
வெள்ளி	1 14	8 21	15 28	22 4	29 11	4 18	11 25	18 2	25 9	32 16
காரி	2 15	9 22	16 29	23 5	30 12	5 19	12 26	19 3	26 10	

ஆங்கில ஆண்டு 1993

கடகம் (ஆடி) சூலை - ஆகஃச்டு					மடங்கல் (ஆவணி) ஆகஃச்டு - செப்டம்பர்				
30 15	2 18	9 25	16 1	23 8		6 22	13 29	20 5	27 12
31 16	3 19	10 26	17 2	24 9		7 23	14 30	21 6	28 13
	4 20	11 27	18 3	25 10	1 17	8 24	15 31	22 7	29 14
	5 21	12 28	19 4	26 11	2 18	9 25	16 1	23 8	30 15
	6 22	13 29	20 5	27 12	3 19	10 26	17 2	24 9	31 16
	7 23	14 30	21 6	28 13	4 20	11 27	18 3	25 10	
1 17	8 24	15 31	22 7	29 14	5 21	12 28	19 4	26 11	
கன்னி (புரட்டாசி) செப்டம்பர் - அக்டோபர்					துலாம் (ஐப்பசி) அக்டோபர் - நவம்பர்				
	3 19	10 26	17 3	24 10	1 17	8 24	15 31	22 7	29 14
	4 20	11 27	18 4	25 11	2 18	9 25	16 1	23 8	30 15
	5 21	12 28	19 5	26 12	3 19	10 26	17 2	24 9	
	6 22	13 29	20 6	27 13	4 20	11 27	18 3	25 10	
	7 23	14 30	21 7	28 14	5 21	12 28	19 4	26 11	
1 17	8 24	15 1	22 8	29 15	6 22	13 29	20 5	27 12	
2 18	9 25	16 2	23 9	30 16	7 23	14 30	21 6	28 13	
நளி (கார்த்திகை) நவம்பர் - திசம்பர்					சிலை (மார்கழி) திசம்பர் - சனவரி				
	6 21	13 28	20 5	27 12		4 19	11 26	18 2	25 9
	7 22	14 29	21 6	28 13		5 20	12 27	19 3	26 10
1 16	8 23	15 30	22 7	29 14		6 21	13 28	20 4	27 11
2 17	9 24	16 1	23 8	30 15		7 22	14 29	21 5	28 12
3 18	10 25	17 2	24 9		1 16	8 23	15 30	22 6	29 13
4 19	11 26	18 3	25 10		2 17	9 24	16 31	23 7	
5 20	12 27	19 4	26 11		3 18	10 25	17 1	24 8	

அச்சமைப்பு: மாணவர் நகலகம், அடையாறு, சென்னை - 20, தொலைபேசி: 411358

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின். - திருக்குறள்

நன்றி: வ. வேப்பையன், கல்பாக்கம்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600 005. (தமிழகம்)